**அநுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்திட்டம் (ஏஐயூடீபீ) - 2023**

---

அநுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (ஏஐயூடீபீ) 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அபிவிருத்திக்கான பிரான்சு முகவராண்மைக்கும் இடையே 2016 திசெம்பர் 01 ஆந் திகதி கைசச்சாத்திடப்பட்ட (2017 ஆகஸ்ட் 31, 2018 மே 14 மற்றும் 2021 மார்ச் 14 ஆந் திகதிகளில் திருத்தப்பட்ட) சீஎல்கே - 100901 ஆர் ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் வசதி ஒப்பந்தத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அநுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (எஸ்சீடீபீ) அமுலாக்கல் முகவராகவுமுள்ளது. அநுராதபுர நகரத்தின் புனித மற்றும் நவீன பகுதிகளுக்கு இடையே தளத்தின் கவர்ச்சிக்கு முக்கியமான அதன் கலாசார மற்றும் இயற்கை பாரம்பரியத்தினை பாதுகாக்கும் நோக்குடன் இணைந்த அபிவிருத்தியின் சமச்சீர் வளர்ச்சி முறையொன்றினை மேம்படுத்துவது செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 10,025.18 மில்லியனிற்குச் சமமான யூரோ 62.4 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,354.32 மில்லியனிற்குச் சமமான யூரோ 52 மில்லியன் அபிவிருத்திக்கான பிரான்சு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதித் தொகையான ரூபா 1,670.86 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்திலிருந்து நிதியீட்டம் செய்வதற்கு இணங்கிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 திசெம்பர் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன், 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறெனிலும், திருத்தப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி 2023 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் மற்றும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றை விடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபட்டவர்களை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டு குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| வடக்கு பல்நோக்கு போக்குவரத்து நிலையத்தை நிர்மாணித்தல் இரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக நீர்ப்பாசனத் திணைக்களத்தில் இருந்து செயற்திட்டத்திற்கு ரூபா 45.9 மில்லியன் மீளச் செலுத்த வேண்டியிருந்தது. எனினும் அது நிதிக்கூற்றுக்களில் வெளிப்பத்தப்படவில்லை. | 45.9 | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் பெற வேண்டிய மீதிகளை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இலக்கம் | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்கீட்டு குறைபாடு/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2022 எப்ரல் 26 ஆந் திகதிய இலக்கம் 03/2022 தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றிக்கையில் (iii) ஆம் பந்தி | “அரைவாசியாகப் பூர்த்தி செய்யப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் கைவிடப்பட்டிருக்கும் போது வசதியீனத்தை குறைக்கும் வகையில் தேவையான பகுதிகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.” எனக் காண்பிக்கப்பட்ட இலக்கம் 03/2022 என்ற தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றிக்கையில் (iii) ஆம் பந்தியின் ஆலோசனைகளுக்கு முரணாக இந்த செயற்திட்டம் அமைச்சினால் நிறுத்தப்பட்டிருந்தது. | முரண்கள் மற்றும் ஏனைய தொழில் நுட்பப் பிரச்சினைகளை சரிசெய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. தற்போது உரிமை கோருகின்ற ஒப்பந்தகாரரை மதிப்பீட்டிற்கு உட்படுத்துகின்றனர | மிகுதி வேலைகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 8.13.4 ஆம் பந்தி | பெறுகை வழிகாட்டியின் 8.13.4 இன் பிரகாரம் செயற்திட்டப் பணிப்பாளருக்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் கீழ் 10 சதவீதம் வரை தேறிய முரண்கள் அங்கீகரிக்க முடியும். | தற்போது தேசிய செயற்பாடுகள் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்ட முழுமையாக செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டி பின்பற்றப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எனினும் செயற்திட்டப் பணிப்பாளரால் வழிகாட்டிக்கு முரணாக 28.4 சதவீதம் முரண்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | இந்த அங்கீகாரத்துடன் செயற்திட்டத் தால் அமைச்சு பெறுவின் குழுவின் அங்கீகாரத்தின் கீழ் தற்போது காணப்படுகின்ற செயற்திட்டத்தை மீண்டும் மதிப்பீட்டிற்கு உற்படுத்தியுள்ளதுடன் வேறுபாடுகள் மற்றும் ஏனைய தொழில்நுட்பப் பிரச்சினைகளை சரிசெய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது |

**3. பௌதீகச் செயலாற்றல்**

**3.1 செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடன் வசதிகள் உடன்படிக்கையின் படி 2021 இன் இறுதி வரையில் செயற்திட்டத்தில் ரூபா 6,562.68 மில்லியன் பெறுமதியான 12 பொதிகள் பெறுகை செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். எனினும் ரூபா 5,025 மில்லியன் பெறுமதியான 07 பொதிகள் பெறுகை நடைமுறைகள் பெறுகை செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. கடன் வசதிகள் 2023 செப்டெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தடுன் செயற்திட்ட கால எல்லையில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட வேலை செயற்திட்டக் காலம் முடியும் போது முழுமையாக பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | மிகுதி வேலைகளை அரசாங்கத்தால் கடன் மீள் கட்டமைப்பு செயற்பாடுகளின் பின்னர் தீர்மானிக்கப் படல் வேண்டும். | செயற்திட்ட கால எல்லையில் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 12 பொதிகளில் ரூபா 2,123.19 மில்லியன் பெறுமதியான 05 பொதிகள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி 02 பொதிகள் மாத்திரமே முடிவடைந்திருந்தது. இலக்கம் 3 மற்றும் 4 பொதிகள் 2023 ஆம் ஆண்டின் போது 04 முதல் 7 மாதங்கள் வரையான தாமதத்தின் பின்னர் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அவை பிரதானமாக தாக்கமளித்த நலிவுகள் நிர்மாண மேற்பார்வை மற்றும் திட்டமிடலில் உள்ள நலிவுகளினால் ஆகும். | பொருளாதார நெருக்கடி பொருட்கள் இன்மை மற்றும் அடிப்படை ஆரம்பத்திட்டம் மற்றும் திட்ட ஆலோசனைகளுடன் உள்ள தொடர்பாடல்களுடன் இருந்து காணப்பட்ட நலிவுகள் தாமதத்திற்கு பிரதான காரணமாகும். | வேலைகளை விரைவுபடுத்துவதற்காக சரியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அநுராதபுரம் தெற்கு பல்நோக்கு போக்குவரத்து நிலையத்தை 2022 பெப்ரவரி 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2023 நவம்பர் 25 ஆம் திகதி 21 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு செயற் திட்டத்திட்டத்தின் வேலைகள் நிறுத்தப்பட்ட போதும் (மண் பாதுகாப்பு செயற்பாடுகள் மற்றும் வடிகால் அமைப்பு முறைகள் தவிர) பிரான்ஸ் முகவர் நிறுவனத்தின் (AFD) மற்றும் பொதுத் திறைசேரியின் தீர்மானம் கிடைக்கும் வரை 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற் திட்டத்திற்காக ரூபா 243.15 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | முரண்கள் மற்றும் ஏனைய தொழில்நுட்ப பிரச்சினைகளை சரிசெய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஒப்பந்தகாரர்களின் உரித்துக்களை தற்போது மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுகின்றது. | வேலைத் திட்டத்தின் பிரகாரம் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 வரையில் செயற்திட்ட பதவியணியினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருந்ததுடன் கால ரீதியில் செயற்திட்ட பணிப்பாளர் மற்றும் முழுநேர அளவிடை நில அளவையாளர் மாத்திரம் செயற்திட்டத்திற்கு நேரடியாக தொடர்புபட்டிருந்ததுடன் செயற்திட்ட கால எல்லையில் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு இருந்த இயலுமை கணக்காய்வின் போது சந்தேகமாக இருந்தது. எனினும் செயற்திட்டத்தை ஆக்கபூர்வமானதாக பூர்த்தி செய்யாமை 2016 ஆம் ஆண்டு முதல் செயற்திட்டம் முகாமைத்துவ பிரிவிற்காக ரூபா 309 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2022 மற்றும் 2023 காலத்தில் காணப்பட்ட நிச்சயமற்ற நிலைமையின் காரணமாக செயற்திட்ட செயலாற்றல் மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. எனினும் 2023 இறுதி அரைப் பகுதியில் தேசிய செயற்பாடுகள் பிரிவின் அங்கீகாரத்துடன் 06 பொதிகள் தெற்கு பல்நோக்கு போக்குவரத்து நிலைய திட்டமிடப்பட்ட பிரகாரம் பூர்த்திசெய்ய முடியுமாக இருந்தமை செயற்திட்டத்தின் நம்பிக்கையாகும். | செயற்திட்டத்தின் சரியான செயற்பாடுகளுக்காக தேவையான பதவியணியினரைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சுரப்புர திறந்த வெளி திரையரங்கு மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வெளி திரையரங்கு என்பவற்றை மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பிரதான உபகரணம் மற்றும் பொருட்கள் (வெளிச்சம் மற்றும் இருக்கைகள்) வழங்கப்படாமையின் காரணமாக அந்த திரையரங்கைப் பயன்படுத்த முடியாதிருந்த நிலைமைக்கு உட்பட்டிருந்தது. அதனால் நிர்மாணத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 331.73 மில்லியன் செலவினம் எதிர்காலத்தின் போது பயனற்ற செலவினமாக கூடியதாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | நாங்கள் தற்போதும் சுரப்புர திறந்த வெளி திரையரங்கு, SLBC திறந்த வெளி திரையரங்கு என்பன உரிய நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அவர்கள் உரிய நிருவாகத்தை பேணிச் சென்று பயன்பாட்டிற்கு எடுக்கும் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | மிகுதி வேலைகளை மேலும் தாமதமின்றி பூர்த்தி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| இ) | தினமொன்றிற்கு 35 கன மீற்றர் இயலளவை உடைய மலக்கழிவு அகற்றும் பிரிவு ரூபா 30 மில்லியன் தொகையில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் அநுராதபுரம் மாநகர சபையின் நகர பிதாவினால் 2022 பெப்ரவரி 10 ஆந் திகதிய கடிதத்தில் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் அந்த அது திருத்தப்பட்டு நாளொன்றுக்கு 75 கன மீற்றர் இயலளவுடன் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மேலும் சரியான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளாமை மற்றும் செயற்திட்டத்தின் வேலை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னிருந்த நகர பிதாவினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை கவனத்திற் கொள்ளாமையின் காரணமாக முரண்கள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதனால் ஒப்பந்தத்தின் மொத்த ஒப்பந்தத் தொகை ரூபா 98.45 மில்லியன் வரை அதிகரித்திருந்ததுடன் செயற்திட்ட பணிப்பாளரால் முரண்கள் கட்டளை அங்கீகரிக்கப்பட்டிருந்தது.<br><br>மேலும் செயற்திட்டப் பணிப்பாளரால் ரூபா 138 மில்லியன் முரண் கட்டளையொன்று காணி தயாரிக்கும் செயற்பாடுகள், காணப்படுகின்ற பேரூந்து நிலைய மறுசீரமைப்பு, மண் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் செயற்பாடுகளுக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | முரண்கள் மற்றும் ஏனைய தொழில்நுட்ப பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஒப்பந்தகாரரின் உரித்துக்கள் தற்போது மதிப்பீட்டிற்கு உட்படுத்தப் படுகின்றது. | வேலைத் திட்டத்தின் பிரகாரம் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பாரியளவிலான அபிவிருத்தி செயற்றிட்டம் (RAMP) மறுசீரமைப்பிற்கான உத்திகள் மற்றும் விரைவுபடுத்துவதற்கான குழுவின் தீர்மானத்திற்கு மேலதிகமாக செயற்றிட்டத்தின் ஆரம்மபத்தின் போது இனங்காணப்படாத ரூபா 236.85 மில்லியன் பெறுமதியான முரண் கட்டளையொன்று செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | அமைச்சின் பெறுகைக் குழவின் அங்கீகாரத்துடன் செயற்றிட்டத்தினால் தற்போது காணப்படுகின்ற செயற்றிட்டத்தில் மீண்டும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் முரண்கள் மற்றும் ஏனைய தொழிநுட்ப பிரச்சினைகளை சரி செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஒப்பந்தக் காரர்களின் உரித்து தற்போது மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுகின்றது. | உரிய அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

3.3 விளைவற்ற/ உட்படத்தப்படாத /குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்.

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடக்கு பல்நோக்கு போக்குவரத்து நிலைய நிர்மாணத்தின் கீழ் நீர்ப்பாசன உத்தியோகபூர்வ கட்டிடங்கள் வேறொரு இடத்திற்கு எடுத்துச் செல்வதற்குாக இழப்பீடாக ரூபா 45.9 மில்லியன் தொகை நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் இந்த பொதி இரத்து செய்யப்பட்டதன் பின்னர் அந்தத் தொகை நீர்ப்பாசனத் திணைக்களத்திடமிருந்து அறவிடயிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அது அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நீர்ப்பாசனத் திணைக்களதிற்கு செலுத்தப்பட்டுள்ள தொகையை அறவிடுவதற்கு நாங்கள் நடவடிக்கைகளை எடுக்கின்றோம். | இழப்பீட்டை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தெற்கு பல்நோக்கு போக்குவரத்து நிலையத்தின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்வதற்காக 2024 ஆம் ஆண்டுக்காக நிதியேற்பாடாக யூரோ 06 மில்லியனுக்கு சமமான ரூபா 2,070 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு தேசிய செயற்பாடுகள் பிரிவு (NOR) தீர்மானித்திருந்த போதிலும் இது தொடர்பாக கடன் வழங்குனருடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த செலவினங்கள் எதிர்காலத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு பொறுப்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.<br><br>அதன் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் நிதியிலிருந்து செயற்திட்டத்திற்காக ரூபா 129 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் 2024 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு ஒப்பந்த நிர்மாணங்களில் 38 சதவீதமான குறைந்த பௌதீக செயல்முன்னேற்றத்தை பெற்றிருந்தது. | கடன் மீள் கட்டமைப்பு செயற்பாடுகளின் பின்னர் ஒதுக்கப்பட்ட ரூபா 2,070 மில்லியன் ஆன யூரோ 06 மில்லியன் கடன் வழங்குநரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கத்திற்கு அனுபவம் காணப்பட்டது. 06 பொதிகள் கடந்த காலத்தில் முகம் கொடுத்த நிதி இடையூறுகள் மற்றும் ஏனைய இடையூறுகளின் காரணமாக 38 சதவீத செயல் முன்னேற்றம் தற்போது பெறப்பட்டுள்ளது. | கடன் வழங்குநரின் விருப்பத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்க எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2016 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட கடன் உடன்படிக்கையின் படி ரூபா 8,354.32 மில்லியன் நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு கடன் முகவர் நிறுவனம் இணங்கியிருந்ததுடன் திறைசேரி நிதியேற்பாடு ரூபா 1,670.86 மில்லியன் ஆகும். கடன் கால எல்லையை 2023 செப்டம்பர் 30 ஆம் திகதி முடிவடைந்திருந்ததுடன் 2023 திசெம்பர் | COVID 19 தொற்று நோய், உலகலாவிய பொருளாதார நெருக்கடி, உள்ளநாட்டு பொருளதாதார பிரச்சினைகள் மற்றும் பணவீக்கத்தின் காரணமாக செயற்றிட்டத்தின் செயற்பாட்டு | கடன் நிதியை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 31 ஆம் திகதி வரையில் ரூபா 2,450.81 மில்லியன் அதாவது 24.45 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக அநுராதபுர சமூக அபிவருத்தி செயற்றிட்டத்தின் 12 பொதிகளில் எதிர்பார்க்கப்ட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | நடவடிக்கைகளை உரிய திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்வதற்கு முடியாதிந்தது. | |
| (ஈ) | ஒப்பந்தகாரரால் தொழிலாளர்கள் மற்றும் இயந்திர பொறி முறைகளின் செயற்பாடற்ற தன்மை மற்றும் அதுசார்ந்த செலவினங்களுக்காக கைவிடல் உரித்திற்காக ரூபா 115 மில்லியன் தொகையில் காலநீடிப்புக்காக ரூபா 69.93 மில்லியன் தொகையும் கோரப்பட்டுள்ளதுடன் அந்தக் கிரயம் செயற்றிட்டத்தை கைவிட்டதன் காரணமாக செயற்றிட்டத்திற்கு ஏற்பட்ட செலவினம் பொறுப்பாகும். | முரண்கள் மற்றும் ஏனைய தொழில்நுட்ப பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஒப்பந்தகாரரின் உரித்துக்கள் தற்போது மதிப்பீட்டிற்கு உட்படுத்தப் படுகின்றது. | மேலதிக செலவிகங்களை தவிர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | செயற்றிட்டத்தை கைவிடலின் காரணமாக ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 1,176 மில்லியனிலிருந்து ரூபா 1,795 மில்லியன் வரை 53 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் அது நேரடியாக இலங்கை அரசாங்கத்தின் நிதியத்திற்குசெலவின பொறுப்பாக இருந்தது. | முரண்கள் மற்றும் ஏனைய தொழில்நுட்ப பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஒப்பந்தகாரரின் உரித்துக்கள் தற்போது மதிப்பீட்டிற்கு உட்படுத்தப் படுகின்றது. | மேலதிக செலவினங்களை தவிர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | பொதி 01 இன் கீழ் புகையிரத பிளாஸா அபிவிருத்தி செயற்றிட்டம் ரூபா 98 மில்லியன் பெறுமதியில் பூர்த்தி செய்யப’பட்டு 2022 ஆம் ஆண்டின் போது புகையிரத திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் குதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிற்றூண்டிச் சாலை 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை உரிய வகையில் பராமரிக்காமையின் காரணமாக செறுமையாகக் காணப்பட்டது. அதனால் புகையிரத திணைக்களத்துடன் நீண்டகால செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளாமையால் புகையிரத பிளாஸா கட்டிடம் செயற்பாடற்று காணப்பட்டது அவதானிக்கப்பட்டது. | பராமரிப்பினை விரும்பி செய்வதற்காக CGR இற்கு அறிவிப்பதற்கு எங்களின் செயற்பாடுகள் பெறுகை நடவடிக்கை எடுக்கின்றோம். எனினும் செயற்றிட்டம் உரியவாறு இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. பராமரிக்கும் பொறுப்பு இலங்கை புகையிரத சேவைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. | புகையிரத திணைக்களத்துடன் நீண்ட கால ரீதியில் உடன்படிக்கை செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அநுராதபுரம் ஒன்றிணைந்த நகர அபிவிருத்தி செயற்றிட்டம் 2023 செப்டம்பர் 30 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் இணங்கப்பட்ட பணத் தொகையான ரூபா 10,025 மில்லியன் தொகையில் ரூபா 2,440 மில்லியன் (24 சதவீதம்) 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பயன்படுத்தப்பட்டிருந்தது. விரிவான திட்டம் சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை $02^{1}/_{2}$ வருட தாமதம் இந்த நிலைமைக்கு பாதகமாக தாக்கமளித்திருந்தது. | COVID 19 தொற்று நோய், உலகலாவிய பொருளாதார நெருக்கடி, உள்ளநாட்டு பொருளதாதார பிரச்சினைகள, மற்றும் பணவீக்கத்தின் காரணமாக செயற்றிட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை உரிய திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | தாமதமின்றி திட்டங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்.

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சொத்து உரிமையாளருக்கு கையளிக்கப்பட்ட செயற்றிட்ட சொத்துக்களின் நீண்டகால நிலைபேறான தன்மைக்காக குறித்துரைத்த சொத்துக்கள் முகாமைத்துவ திட்டமொன்று செயற்றிட்டத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் கிடைத்த பின்னர் நீண்டகால நிலைபேறான தன்மைக்காக சொத்துக்கள் முகாமைத்தவ திட்டம் தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் முகாமைத்தவ திட்டத்தை முழுமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | செயற்றிட்ட செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் மற்றும் பூர்த்திகளை அளவிடுவதற்காக பிரதான செயலாற்றுகை குறிகாட்டி ஸ்தாபிக்கப்பட்டிருக்கடிருக்க வில்லை. | பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் ஸ்தாபிக்கப்படடிருக்கவில்லை. | பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளை ஸ்தாபிபப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |